**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 340 நாள்: 26.10.2025

அரசாணை (நிலை) எண்.324, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.17.10.2025ன்படி, வரும் 27.10.2025, 28.10.2025 மற்றும் 29.10.2025 ஆகிய நாட்களில் வார்டுகளில் சிறப்பு கூட்டம் நடத்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளில் மாமன்ற உறுப்பினர் தலைமையில் மேற்காணும் மூன்று நாட்களில் ஏதாவது ஒரு நாளில் இச்சிறப்பு கூட்டம் நடைபெறவுள்ளது.

மேலும், இச்சிறப்பு கூட்டம், பெருநகர சென்னை மாநகராட்சி அனைத்து மண்டலங்களில் உள்ள உதவி செயற் பொறியாளர் அலுவலகம், கோட்ட பகுதி பொறியாளர் அலுவலகம், சமுதாய நலக்கூடங்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர் தெரிவிக்கும் இடங்களில். நடைபெறவுள்ளதால், பொதுமக்கள் கலந்து கொண்டு சேவைகளை மேம்படுத்தும் நோக்குடன் கோரிக்கைகளை தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**